செ.வெ.எண்:301/2016 **பத்திரிக்கை செய்தி** நாள்: 26/05/2016

## நாகர்கோவில் புறநகர் ரோட்டரி சங்கம் சார்பில் குழந்தைகளுக்கான இலவச இதய சிகிச்சை முகாம் 29-ம் தேதி நடக்கிறது.

நாகர்கோவில் புறநகர் ரோட்டரி சங்கம் மற்றும் சென்னை அப்போலோ மருத்துவமனை சார்பில் நாகர்கோவில் இராமவர்மபுரம் கிளப் வளாகத்தில் வைத்து வருகிற 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் குழந்தைகளுக்கான இலவச இதய சிகிச்சை முகாம் நடைபெறுகிறது.

முகாமுக்கு புறநகர் ரோட்டரி சங்கத்தின் தலைவர் சுகதேவ் தலைமை தாங்குகிறார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தர்மராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமை துவக்கி வைக்கிறார். ரோட்டரியின் முன்னாள் ஆளுநர்கள் டாக்டர் ஷண்முகம் மற்றும் ஷாஜகான் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். ரோட்டரி இதய முகாமின் மாவட்டத் தலைவர் டாக்டர். கோதண்டராமன், உதவி ஆளுநர் குற்றாலிங்கம் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

இந்த முகாமில் மூன்று மாதம் முதல் பதினாறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச இதய நோய் பரிசோதனை செய்வதற்காக சென்னை அப்போல்லோ மருத்துவமனையை சேர்ந்த டாக்டர்கள்

அடங்கிய மருத்துவ குழுவினர் வருகை தருகின்றனர். முகாமில் அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு சென்னை அப்போல்லோ மருத்துவமனை மூலம் இலவச இதய அறுவை சிகிச்சையும் செய்யப்பட உள்ளது. ஏற்கனவே இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முகாமுக்கு வரும்போது முந்தைய மருத்துவ பரிசோதனைக்கான விபரங்களையும் கொண்டு வர வேண்டும். இம்முகாமை பற்றி கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அருகில் உள்ள ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களை அணுகலாம். அல்லது **9944420574** என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இதற்கான ஏற்பாடுகளை சங்க செயலாளர் கோபால கிருஷ்ணன் மற்றும் உறுப்பினர்கள் செய்து வருகின்றனர்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்